[1973 மார்ச் 17

மேட்டுநாவிதன்பாளைய அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 406. வினா—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு தாலுக்கா, மேட்டுநாவிதன்பாளையம் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக சுமார் 10 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய 4(1) நோட்டீஸ் வெளியிடப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது?

(உ) தற்போது அந்த நில ஆர்ஜிதம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஈரோடு வட்டம், மேட்டுநாசிவம்பாளையம் (மேட்டுநாவிதன் பாளையம்) கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக மேற்படி ஊரில் 10.80 ஏக்கர் புஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட 4(1) முன்மொழிவு வரைவு அரசு வாலாய ஆணை எண் 1654, ச.ந., தேதி 22—6—1970-ல் ஏற்கப்பட்டு 31—5—1971 தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(உ) பிரிவு 5-ஏ விசாரணையின்போது நிலச் சொந்தக்காரர்கள் ஆட்சேபனை தெரிவித்ததாலும், அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியதாக இருப்பதாலும், திருத்திய செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அத்திருத்திய செயற்குறிப்பு வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாக அரசுக்கு வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கள் விற்பனை

* 407. வினா—திரு. என். கிட்டப்பா
திரு. என். கே. பழனிசாமி } மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளைப் பதனப்படுத்தி புட்டியில் அடைத்து விற்பனை செய்யும் கள பதனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.